பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 22 செவ்வாய்க்கிழமை 05.03.2024 கதிர் 119

# மின் கட்டணம் 21 % குறைப்பு

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி

மின்கட்டணத்தை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 21.9 சதவீதத்தால் குறைக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த யோசனை மற்றும் செலவுகளுக்கு அமைய 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கமின் சாரத்துறை சட்டத்தின் 30 ஆவது பிரிவு மற்றும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மானியங்களுக்கு ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பொது ஜன பெரமுனவுக்கும் ரணிலுக்கும் இடையிலான முறுகல் மெல்ல மெல்லத் தீவிரமடைந்து வருகின்றது. பொருளாதார மீட்சி என்றபெயரில்அரசநிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் ரணிலின் திட்டத்தை எதிர்ப்பது என்று கட்சிக்குள் ஒருதரப்பினர் தீவிரமான நிலைப்பாட்டைஎடுத்துவருகின்றனர். நாமல் ராஜபக்ச அந்த அணிக்குத் தலைமை தாங்குகின்றார்.

நாட்டின் தற்போதைய அரசியல் களச் சூழலில் பெரமுன எதிர்க் கட்சி வரிசையில் இருக்கவேண்டும், அப்போதுதான் மக்களிடம் தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடியும் என்பது நாமலின் திடமான நிலைப்பாடு. நீண்ட நாட்களாக தனது கருத்தை அவர் வலியுறுத்தி வருகின்றார். ஆனால், கட்சியின் ☞ 2

## பெற்றோல், டீசல் விலைகளில் மாற்றமில்லை

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் திருத்தப்பட்டுள்ளதாக இலங்கைபெற்றோலியகூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 92 ரக பெற்றோல், மற்றும் டீசலின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

இதேவேளை, 95 ரக பெற்றோல் 9 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 447 ரூபா ☞ 2

## வரலாற்றிலேயே முதல் தடவையாக சபாநாயகருக்கு எதிராக பிரேரணை

### எதிர்க்கட்சிகள் இன்று சமர்ப்பிப்பு

நாடாளுமன்றஅமர்வு இன்றுதொடங்கும்போது சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்த்தனவுக்கு எதிராகநம்பிக்கையில்லா பிரேரணையைசமர்ப்பிக்க உள்ளதாக எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதற்தடவையாக சபாநா யகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதோடு இதற்கு முன்னதாகஅப்பதவியில் இருந்தஎந்தவொருவரும் இத்தகையநிலைமையை முகங்கொடுத்திருக்க வில்லை.

எதிர்க்கட்சிகளின் தீர்மானம் தொடர்பில் சுதந்திரமக்கள்காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிக்கையில்,

சபாநாயகருக்கு எதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி பெறச் செய்யும் நடவடிக்கையின் பின்னணியில் அனைத்துஎதிர்க்கட்சிகளும் இணைந்துள்ளன.

இந்தபிரேரணையின் முக்கிய அம்சமாக ☞ 2

## நடுநிலைமையில் அர்ப்பணிப்பு இதுவே அயலுறவுக் கொள்கை

### இலங்கை நிலைப்பாட்டை விளக்குகிறார்

வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலைமை, சமாதானத்தை ஊக்குவிப்பது மற்றும் அனைத்துவகையிலான பாகுபாடுகளையும் ஒழிப்பதுபோன்றவற்றில் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நடுநிலைக் கொள்கைக்கான உறுப்பு நாடுகளின் நாடாளுமன்றங்களின் தலைவர்களுக்கான மாநாட்டில் நிகழ்நிலை மூலம் உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

'சமாதானம் மற்றும் கலந்துரையாடலை பலப்படுத்துவதில் பாராளுமன்றஒத்துழைப்பின் வகிபாகம்' என்ற தொனிப்பொருளில் துருக்மெனிஸ் ☞ 2

### வீபூதி, சந்தனம், பன்னீர் தெளிக்க

## எல்லாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சாந்தனின் வித்துடல் நேற்றிரவு விதைப்பு







இந்தியாவில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்த சாந்தன் எனப்படும்தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் வித்துடல் நேற்றிரவு எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

பெருமளவிலான மக்களின் கண்ணீர்க் கதறலுக்குமத்தியில்சைவ-முறைப்படி சாந்தனின் வித்துடல் ☞ 2

### அரச வைத்தியசாலைகளில்

## கதிரியக்க நுட்பவியலாளர்களின் பற்றாக்குறையால் பணி முடக்கம்

கதிரியக்க தொழில் நுட்பவியலா ளர்களின் பற்றாக்குறை காரணமாக பல்வேறு வைத்திய சாலைகளின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதாகஅரசகதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

கதிரியக்க தொழில் நுட்பவியலா ளர்களின் பற்றாக்குறைகாரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி தேசியவைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, குருணாகல் பொது வைத்தியசாலை, பதுளை பொது வைத்தியசாலை, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு வைத்தியசாலைகள் கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

சேவையில் ஈடுபட்டுள்ள ☞ 2

## பொது ஜன பெரமுன கட்சி எதிர்த்தரப்புக்கு செல்லாது

### பொதுத் தேர்தலும் கேட்கவில்லை என்கிறார் சாகர

பொது ஜன பெரமுன எதிர்த்தரப்பிற்குப் போகப் போகிறது, பொதுத் தேர்தலை வலியுறுத்துகின்றதுஎன்றுசொல்லப் படுவதெல்லாம் வெறும் பொய். எமதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவோம். பொ-ருளாதார மீட்சி என்ற பெயரில் தேசிய வளங்களைவிற்பதற்குத் துணைபோகமாட்டோம்.

இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றஉறுப்பினருமான சாகரகாரியவசம் தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆளும் தரப்பில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற் ☞ 2

## போக்குவரத்து திணைக்களத்தில் சேவை பெற முற்பதிவு அவசியம்

### நேற்று முதல் இந்த விதி அறிமுகம்

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவைகளைப்பெற்றுக் கொள்ள வருகை தருவோர், முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டியது நேற்று முதல் கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மோட்டார் வாகனத் திணைக்களத்தில் ஏற்படுகின்ற நெரு-க்கடியான நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கு சில ☞ 2

## மின், எரிபொருள் விநியோகம் இனி அத்தியாவசிய சேவைகள்

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிசெயலாளர் சமன் ஏக்கநாயக்க கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின்61ஆம்இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய எனக்குரித்தாக்கப் பட்டுள்ளதத்துவங்களின் பிரகாரம், ☞ 2

## தொல்பொருள்கள் தொடர்பில் விரைவில் புதிய சட்டங்கள்

### அமைச்சர் விதுர அறிவிப்பு

நாட்டின் தொல் பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம் பரியங்களைகண்டறிதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குதல் ஆகியவற்றை முறையாக முன்னெடுப்பதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்ட மூலமொன்றை உருவாக்கவுள்ளதாக புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மூத்த ராஜபக்சக்களிடம் இருந்து அதற்கான சாதக சமிக்ஞைகள் கிட்டவில்லை. அதனால், இப்போதுரணிலின்தனியார்மயப்படுத்தலை கட்சியின் கொள்கை என்ற அடிப்படையில் ஆளும் தரப்பிலிருந்தேஎதிர்ப்பதுஎன்கிறமுடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம்கூட இந்தக் கருத்தை வலியுறுத்தினார். ''பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களைதனியார்மயப்படுத்தும் செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்தால்அதற்குஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். நட்டமடையும்அரசநிறுவனங்களை தேசிய பங்குடமையுடன் நிர்வகிக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்'' என்றார் அவர். ஆக மொத்தத்தில் ரணிலுக்குத் தலையிடி கொடுக்க பெரமுன தீவிரமாகத் தயாராகி வருகின்றது. இவை அனைத்தும் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸிலின் ஆசீர்வாதத்துடன்தான்நடக்கின்றன என்கின்றனஉள்வீட்டுத்தகவல்கள். ரணிலைக் கடிவாளம் போட்டுக் கையில் வைத்துக்கொள்வதற்கான பஸிலின் நகர்வுகள்தான் இவை என்றும் சொல்லப்படுகின்றது.

மறுபுறத்தில்ரணிலும்விடுவதாக இல்லை. இதற்கெல்லாம்பதிலடியாக, ரணிலுக்காக உருவாக்கப்பட்ட புதிய கூட்டணி தனது மூன்றாவது அரசியல் கூட்டத்தை மகிந்த ராஜபக்சவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பெரமுனவில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னர் தற்போது ரணிலின் தீவிர விசுவாசியாகிவிட்ட நிமல் லன்ஸா மற்றும் மகிந்த அமரவீர ஆகியோரின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ராஜபக்சக்களுக்குத் தமது பலத்தைக் காண்பிக்கும் வகையிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இந்தக் கூட்டணியின் முதல் கூட்டம் ஜலாடியில் இடம்பெற்றது. இரண்டாவதுகூட்டம் கொழும்பு ஹைட்பார்க்கில் இடம்பெற்றது. மூன்றாவது கூட்டத்தை ராஜபக்சவின் வீரகெட்டிய கிராமத்திலேயே, கிட்டத் தட்ட ராஜபக்சவின் வீட்டு வாசலிலேயே நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவென மகிந்த அமரவீர ஏற்கனவே அம்பாந்தோட்டைக்குச் சென்றுள்ளார். விரைவில் கூட்டத்திற்கான திகதி மற்றும் ஏற்பாடுகள் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும்.

குடைச்சல் கொடுத்தால் அடிமடியிலேயே கைவைப்பேன் என்கிறசெய்தியைராஜபக்சக்களுக்கு வழங்குவதே ரணிலின் இந்த நகர்வின்நோக்கம்என்றுகொழும்பு அரசியல்பரபரப்பாகச்சிரிக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைவாக கண்காணிப்பு மற்றும் மீள்பரிசீலனைகளுக்கு அமைய இந்ததீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை கடந்த ஜனவரி மாதம் நூற்றுக்கு 3.34 சதவீதத்தாலும் பின்னர் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பித்த மின்கட்டண திருத்த யோசனையின்பிரகாரம்நூற்றுக்கு 14சதவீதத்தாலும்மின்கட்டணத்தை குறைப்பதற்குபரிந்துரைத்திருந்தது.

மின்சாரசபையினால்சமர்ப்பிக்கப்பட்டசெலவினங்கள்தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு மற்றும் பொதுமக்களின் கருத்துக் கோரலின்போது கிடைக்கப்பெற்ற யோசனைகளைக்கருத்திற்கொண்டு மொத்த மின்கட்டணத்தை 21.9 சதவீதத்தினால் குறைப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நேற்று நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டிருக்கும் இத்திருத்தம் மூலம் சகல மின்நுகர்வுக் கட்டணங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுபாவனையில்30அலகுக்கு குறைவானமின்னலகைபாவிக்கும் மின்பாவனையாளர்களின்மின்னலகுக்கான கட்டணம்நூற்றுக்கு33 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

31முதல் 60 அலகுகளுக்கான மின்கட்டணம் 28 சதவீதத்தால் முழுமையாக குறைக்கப்பட்டுள்ளது.61-முதல்90வரையான அலகுக்கான கட்டணம் 30 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 90 அலகுக்கு மேற்பட்டதும்180இற்குக்குறைந்ததுமான மின்னலகுக்கான கட்டணம் 24 சதவீதத்தாலும் 180 அலகுகளுக்கு மேற்பட்ட பாவனைகளுக்கான கட்டணம் 18 சதவீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது.

மதத் தலங்களுக்கான மின்கட்டணம் 33 சதவீதத்தாலும் பொது பாவனைகளுக்கான மின்கட்டணம் 23 சதவீதத்தாலும், அரச நிறுவனங்களுக்கான கட்டணம் 22 சதவீதத்தாலும்குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஹோட்டல் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான கட்டணம் 18 சதவீதத்தாலும், வீதி மின்விளக்குகளுக்கான கட்டணம் 20 சதவீததத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டணத் திருத்தத்துக்கு அமைய 30 அலகுகளுக்கு குறைவானமின்னலகைபாவிக்கும் நுகர்வோருக்கான மாதாந்த மின்கட்டணம்180ரூபாவில்இருந்து 150ரூபாவாககுறைக்கப்பட்டுள்ளது. ஒரு அலகுக்கு அவர்கள் செலுத்தும் கட்டணம் 12 ரூபாவில் இருந்து 8 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

31-60 அலகுகளுக்காக அறிவிடப்பட்ட 360 ரூபா மின்கட்டணம் 300 ரூபாவாகவும் ஒரு அலகுக்கான கட்டணம் 30 ரூபாவில் இருந்து 20 ரூபாவாகவும் குறைக்கப்பட்டதுள்ளது.

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உத்திகளை கையாள்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில், திணைக்களத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவருகைதருபவர்கள் முற்கூட்டியே நேரங்களை ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இது நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் அமுலாக்கப்படும்.

இதற்காக இரு முறைமைகள் பின்பற்றப்படுகிறது. திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் மற்றும் தொலைபேசி அழைப்பின் ஊடாக நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

## நடுநிலமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் பாராளுமன்றத்தினால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பல்வேறு நாடுகளுடைய பாராளுமன்றங்களின் சபாநாயகர்கள்,பிராந்திய,சர்வதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

அவர் சபாநயகர் மேலும் தெரிவித்ததாவது:

சமாதானத்தைக் கட்டியெழுப்புவது மற்றும் மோதல்களைத் தடுப்பது போன்றவற்றில் பாராளுமன்றங்களின் வகிபாகம் மிகவும் முக்கியமானது.

ஜனநாயகமற்றும்பிரதிநிதித்துவ அரசியல் கட்டமைப்பானது கலகங்களைத்தடுப்பதற்குஉதவுவது மாத்திரமன்றி மோதல்களுக்குப் பின்னர் சமாதானத்தை மீண்டும் உருவாக்குவதற்கும்முக்கியமானது.

பாராளுமன்றங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், மக்களின் கருத்துக்களை வடிவமைப்பதற்கும், விசாரணைகளை ஊக்குவித்து, சாட்சியங்களைக் கோருவதற்குமே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தப்படுகிறது.

விசேடமாக, தகவல்களைத் தெரிவிப்பதற்கும்,அறிவூட்டுவதற்கும் மற்றும் ஈடுபாடுகளை அதிகரிக்கச் செய்வதற்குமான இடத்திலேயே சமூக ஊடகங்கள் இருக்கின்றன என்றார்.

## கதிரியக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள்நாட்டிலிருந்துவெளியேறுகின்றமை சடுதியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே இந்தநிலைமைகள்ஏற்பட்டுள்ளன. அரசாங்கம்இந்தவிடயம்சம்பந்தமாக எவ்விதமான கரிசனைகளையும் கொள்ளாதுள்ளது என்றார்.

## பொது ஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளனர்என்றுவெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை. நாடாளு மன்றத்தில் பொது ஜன பெரமுனவின் வசம் பெரும்பான்மைப் பலம் உள்ள நிலையில் எதிர்க்கட்சி பக்கம் செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை.

ஜனாதிபதித்தேர்தல்தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதித்தேர்தலைநடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொது ஜன பெரமுன வலியுறுத்தியுள்ளதாகஎதிர்தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு நாங்கள் வலியுறுத்தவில்லை.எந்த தேர்தலை நடத்தினாலும் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம்.

பொது ஜன பெரமுனவின் வேட்பாளர்ஒருவரைஜனாதிபதியாக களமிறக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். தேசியத்துக்கும்,பௌத்தமதத்துக்கும் அதேபோல்ஏனையமதங்களுக்கும் முன்னுரிமை வழங்கும் நபரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களைதனியார்மயப்படுத்தும் செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்தால்அதற்குஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். நட்டமடையும்அரசநிறுவனங்களை தேசிய பங்குடமையுடன் நிர்வகிக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம் - என்றார்.

## வரலாற்றிலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதுநாடாளுமன்றநிகழ்நிலைக் காப்புச்சட்டத்தினைதனதுபொறுப்புக்கள் மற்றும்கடமைகளில்இருந்துவிலகியே சபாநாயகர்சான்றுரைப்படுத்தியுள்ளார் என்பதாகும்.

குறிப்பாக வரவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு பிரேரணை மிகவும் முக்கியமானதொன்றாகும். சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை,பயங்கரவாதத் தடைச்சட்டமூலம்நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதற்கு முன்னர், இந்த விடயத்தின் அவசரத் தேவையைவலியுறுத்தும்வகையில் உரையாற்றப்படவேண்டும்என்றார்.

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 458 ரூபாவாகும்.

மண்ணெண்ணெயின் விலை லீற்றருக்கு 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 257 ரூபாவாகும்.

## மின்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வறி வித்தலின் மூலம் மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகிய சேவைகளை வழங்குவது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொல்பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

கடினமான சூழ்நிலையில் பராமரிக்கப்படும் புனிதத் தலங்களை பாதுகாப்பதற்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத்தேவையானநிதி ஏற்பாடுகளை வழங்குவதில் எமது அமைச்சு கவனம்செலுத்தியுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் தற்பொழுது சரிபார்க்கப்படுகின்றன. 2024மார்ச்15ஆம்திகதிக்குமுன்னர் அந்தந்த புனிதத் தலங்களுக்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்கள் கண்டறியப்பட்டு, பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு முறையான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அதில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கல் தொடர்பில் அடிப்படை விதிகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான கருத்துக்களும்ஆலோசனைகளும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து பெறப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

'பிக்கு கதிகாவத்' சட்டத்தைத் தயாரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம். அதற்கான முன்மொழிவுகளை மகா நாயக்க தேரர்களாலும் சங்க சபைகளாலும் வழங்குமாறு கேட்டுள்ளோம். இது எளிதான காரியம் அல்ல.

ஆனால் பிக்கு ஒழுக்கம் உட்பட பல்வேறு பிரச்சினைகளை இதன் மூலம் தீர்க்க முடியும் என்று பெரும்பான்மையானவர்கள்நம்புகிறார்கள். அத்துடன் இலங்கையை தேரவாத சர்வதேச பௌத்த நிலையமாக மாற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தை நடைமுறைப்படுத்த அமைச்சு என்ற ரீதியில் நாம் தயாராக உள்ளோம் என்றார்.

# பொன்சேகாவுக்கு சார்பான தடை உத்தரவு நீடிப்பு

சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியின் உத்தியோகபூர்வ பதவிகளில் இருந்து நீக்குவதை தடுக்கும்தடைஉத்தரவைகொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே நீட்டித்துள்ளார்.

பெப்ரவரி 19 ஆம் திகதி சரத் பொன்சேகாவினால்தாக்கல்செய்யப்பட்ட மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையடுத்து அத்தே மேற்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது

அதேநேரம் குறித்த உத்தரவானது, எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை அமுலில் இருக்கவுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பு, பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர், களனி தேர்தல் தொகுதிஅமைப்பாளர்மற்றும்அவரது கட்சி உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குவதை குறிப்பாக தடை செய்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, மனு தொடர்பான ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதாக நீதிபதிக்கு அறிவித்தார். எனினும் முன்னேற்றங்களை எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதி தங்கள் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க நீதிபதி காலக்கெடு விதித்துள்ளார்.

## எல்லாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இலங்கைக்குத் திரும்ப விரும்பியபோதும்பயணஆவணங்கள் எதுவும் இல்லாததால் அவரைத் திருப்பியனுப்பமுடியாதுஎன்றுஇந்திய அதிகாரிகள் மறுத்துவிட்டனர். பல கோரிக்கைகள்மற்றும்சாந்தனின்உடல் நலம் மோசமாகிய காரணங்களால் இறுதியில் இலங்கை இந்திய அரசுகள் சாந்தனை இலங்கைக்கு அனுப்பஇணங்கின. தாயகம்திரும்ப இருந்த நிலையில் சாந்தன் திடீரென மாரடைப்பால் உயிரிழந்திருந்தார்.

சாந்தனின்உயிரிழப்புதாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருந்தது. சாந்தன் இலங்கைக்கு உயிரோடு திரும்பி தனது கடைசி ஆசையான தாயை நேரில்பார்ப்பார்என்றுஎதிர்பார்த்திருந்த நிலையில் அவர் உயிரிழந்தமை தமிழர்கள் மத்தியில் இந்திய அரசு மீதான சீற்றத்தை அதிகரித்துள்ளது.

கடைசியில் உயிரிழந்த சாந்தனின்புகழுடல்விமானம்மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டது. வவுனியாவில் இருந்து உடுப்பிட்டிவரைஅவரதுபுகழுடலுக்கு மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

உடுப்பிட்டியில் உள்ள அவரது சகோதரியின்வீட்டில்அவரதுபுகழுடல் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டது. அங்குஇறுதிக்கிரியைகள்இடம்பெற்ற பின்னர் இறுதி அஞ்சலி உரைகள் இலக்கணவத்தைஅறிவகம்சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

அதன் பின்னர் எல்லாங்குளம் மாவீரர்துயிலும்இல்லத்திற்குஅவரது புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டது. வழியில் தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீடு இருந்த இடத்தில் புகழுடல்வைக்கப்பட்டுஇறுதிஅஞ்சலி செலுத்தப்பட்டது.

அங்கிருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்கள் புடைசூழபுகழுடல்நல்லடக்கத்திற்காக





உடல் தூயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. வீதிகளில் திரண்டு மக்கள்தமதுஅஞ்சலியைசெலுத்தினர்.

இறுதியாகஎள்ளாங்குளம்மாவீரர் துயிலுமில்லத்தில்உற்றார்உறவினர் நண்பர்கள் முன்னாள் போராளிகள் எனப்பெருமளவிலானோரின்கண்ணீர் கதறலுடன்சாந்தனின்வித்துடல்விபூதி, சந்தனம்குங்குமம்,பன்னீரில்அபிஷேகம் செய்யப்பட்டு விதைக்கப்பட்டது.

விதைக்கப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திகொலைவழக்கில்கைது செய்யப்பட்டுமுப்பதுவருடங்களுக்கு மேலாக சிறையில் தண்டனை அனுபவித்த சாந்தன், இந்திய உச்ச நீதிமன்றத்தால் தண்டனைக் காலம் முடிந்து விடுவிக்கப்பட்டார். எனினும் அவர்மீண்டும்திருச்சிசிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# திருக்கோணேஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வை தொடக்கி வைத்தார் கிழக்கு ஆளுநர் செந்தில்





(ஹஸ்பர் ஏ.எச்)

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வு சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் ஆரம்பமானதுடன், தமிழ்நாடு கோவிலூர் ஆதீனத்தின் 14 ஆவது பட்டமாக விளங்கும் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிகர் சுவாமிகளின் சொற்பொழிவு இடம்பெற்றது.

இதேவேளை எதிர்வரும் 08 ஆம் திகதி சிவராத்திரி தினம் வரை இந்நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)



# மட்டு தமிழ்ச்சங்க பொதுக் கூட்டம்

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறும்.

அது தொடர்பான செயற்குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசா சென்ற கூட்டறிக்கை வாசிக்க ஆரம்பமானது.

சங்கத்தின் பொருளாளர் க..தியாகராஜா பொருளாளர் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க துணைத்தலைவர் அமரர் ஆ.மு.சி. வேலழகனது நூல் வெளியீடு மற்றும் நினைவுப் பேருரை பற்றிய தீர்மானமும் எடுக்கப்பட்டது. சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் சார்ந்த கருத்துக்கள் செயற்குழு உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன. சங்க பொதுச்செயலாளரின் நன்றியுரையுடன் நிறைவுற்றது. (05)

# பாராட்டு விழாவும் ஒன்றுகூடலும்

(வி.ரி.சகாதேவராஜா)

ஓய்வுபெறும் கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்து விற்கான சேவைநலன் பாராட்டு விழாவும், மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91ஃ92 அணியினரின் ஆறாவது ஒன்று கூடலும் ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு ,அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த புலன அணி ஆசிரியர்கள் 50 பேர் இந்த ஒன்று கூடலிலும், பாராட்டு விழாவிலும் கலந்து கொண்டார்கள் .

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91ஃ92 அணியினரின்ஆறாவது ஒன்றுகூடல் புலன அணியின் தலைவர் வீ.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெறும் கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்து விற்கான பாராட்டு கௌரவிப்பு விழா பொன்னாடை போர்த்தி இடம்பெற்றது. அனைவரும் தனது கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

கவிமாமணி எஸ்.புண்ணியமூர்த்தி வாழ்த்துப்பா வாசித்தளித்தார். இடையே விநோத விளையாட்டு இடம்பெற்றது. பாடல்களை சோதி, சுகுணா, சுஷ்மிதா ஆகியோர் பாடினார்கள். டில்பிரபா கவிதை பாடினார்.

திருகோணமலை புலன உறவுகளான சண்முகநாயகம் சசிகலா, இந்திராணி, நளினி, கிரிஜா, குமுதினி ஆகியோர் வருகை தந்திருந்தார்கள் என்பதும் லண்டன் நண்டு நடா இணை அனுசரணை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# கனமூலை பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு!





(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் - தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹூதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எச். சிஹார் ஆசிரியரின் அயராத முயற்சியினால் ஆஸ்திரேலியா நாட்டில் வசித்துவருகின்ற சகோதர இனத்தைச் சேர்ந்த ஹேமந்த அவர்களின் சொந்த நிதியிலிருந்து ரீமா பவுண்டேஷன் ஊடாக சுமார் பத்து லட்சம் பெறுமதியில் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் 310 பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ள.

அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹூதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சிஹார் ஆசிரியர் கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உட்பட உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்க கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதேவேளை இதனை பெற்றுத்தந்த ஹூதா நிறுவனத்தின் பணிப்பாளருக்கும், இதனை வழங்கிய ஹேமந்த அவர்களுக்கும் பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர். (05)

# மண்ணும் மனிதர்களும் சிறுகதை நூல் திருகோணமலையில் வெளியீட்டு விழா

(ஹஸ்பர் ஏ.எச்)

அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இலக்சுமி பிரசுராலயத்தின் வெளியீட்டில் உருவான யோரச் அருளானந்தம் (நியூஸிலாந்து) எழுதிய 'மண்ணும் மனிதர்களும்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை மாலை 4.20 மணியளவில் திருகோணமலை நகராசி மன்ற பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணமலை நகராசி மன்றத்தின் செயலாளர் வெ.இராஜசேகர் கலந்து சிறப்பித்தார், அவருக்கு நூலின் முதல் பிரதி வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. அவர் சிறப்புரை வழங்குவதையும், நூல் நயவுரையை கவிஞர் க . யோகானந்தன் நிகழ்த்தினார்.

இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் சிறுகதை நூல் இலவசமாகவே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)





# வெற்றிலைக்கேணி பகுதியில் மீனவர்கள் இடையே முறுகல்

## பொலிஸாருடனும் முரண்பாடு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் மீனவர்கள் இடையே ஞாயிற்றுக்கிழமை முறுகல் நிலை ஏற்பட்டது.

வெற்றிலைக் கேணி கடற்றொழிலாளர் சங்கத்திற்குட்பட்ட கடல் பகுதியில் உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதற்கு குறித்த சங்கத்தால் தடை விதிக்கப்பட்டது.

உடனடியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதை நிறுத்துமாறு வெற்றிலைக்கேணி மீனவர்களின் கையொப்பத்துடன் வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கத்தினரால் கரைவலை தொழில் சம்மாட்டியிடம் கடிதம் கையளிக்கப்பட்டது.

எனினும் தமது அறிவுறுத்தலை பொருட்படுத்தாது தொடர்ச்சியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்துவருவதால் ஞாயிறு காலை குறித்த கரைவலை வாடி மீனவர்களால் முற்றுகையிடப்பட்டு உழவு இயந்திரம் மூலம் கரைவலை இழுப்பது நிறுத்தப்பட்டது.

சம்பவ இடத்தில் அதிகளவான மீனவர்கள் ஒன்று கூடியதால் சிறிது நேரம் பதற்றம் நிலவியதுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸாருடனும் மீனவர்கள் முறுகலில் ஈடுபட்டனர்.

உடனடியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதை நிறுத்தாவிடில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (05)

# எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் பங்குபற்றும் வாசிப்பு கலந்தாய்வு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் கலந்து கொள்ளும் வாசிப்பும் கலந்துரையாடலும் நிகழ்ச்சி நாளை (புதன்கிழமை) மாலை மூன்று மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நிகழ்வில் ஐயாத்துரை சாந்தன் அவர்கள் தன்னுடைய இலக்கிய எழுத்துக்களில் இருந்து வாசிப்புகளை மேற்கொள்வார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

ஐயாத்துரை சாந்தன் இந்தியாவில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றாகிய 'சாகித்திய அக்கடமி' விருது பெற்றவர். அத்துடன் அவர் இலங்கையில் 'சாகித்ய ரத்னா' பட்டம் பெற்றவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் சுமார் முப்பது இலக்கிய படைப்புக்களை உருவாக்கியுள்ளார். இவரது படைப்புகள் பல மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளதோடு பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழலும் தண்டனை விலக்களிப்பும்

நம் நாட்டில் ஊழல் மற்றும் குற்றங்கள் புதிய உச்சத்தை எட்டியுள்ளன. டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் கருத்துப்படி, '180 நாடுகளில் இலங்கை 115ஆவது ஊழல் குறைந்த நாடு'. இந்தக் கணக்கெடுப்பின்படி இலங்கை 2002 முதல் 2023 வரை சராசரியாக 87.50 புள்ளிகள் என்ற அடிப்படையில் இருந்தது, 2023இல் 115.00 என்ற வரலாற்று மட்டத்தை எட்டியது.

அதேபோன்று இலங்கையில் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து விடுபடும் போக்கு அதிகரித்துள்ளது என்று சர்வதேச நீதிபதிகள் ஆணையம் (ICJ) கூறுகிறது, பல ஆண்டுகளாக தண்டனையிலிருந்து விடுபடுவது நிறுவனமயமாக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளது என்கிறது அந்த அமைப்பு.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் காலத்தில், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மூலம் தன்னிச்சையாக அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான சோதனை முயற்சிகள், அதாவது சுயாதீன ஆணைக்குழுக்கள் நீர்த்துப்போகச் செய்யப்பட்டன, மேலும் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நிறுவனங்கள் சிதைக்கப்பட்டன.

மனித உரிமை மீறல்கள் அல்லது ஊழலில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளை அடையாளம் காணவும், விசாரணை செய்யவும், வழக்குத் தொடரவும், தண்டிக்கவும் இலங்கை ஆளும் தரப்புக்கள் மிகக் குறைந்தபட்ச நடவடிக்கைகளையே எடுத்துள்ளன.

முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் குற்றச்செயல்கள் 20% அதிகரித்துள்ளதாக காவல்துறை தரவுகள் தெரிவிக்கின்றன. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 325 ஆக இருந்த கொலைகளின் எண்ணிக்கை 2023இன் முதல் ஆறு மாதங்களில் 383 ஆக அதிகரித்துள்ளது.

1999ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வின்படி, உலகில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தப் பின்னணியில்தான் நமது நாட்டின் நீதிமன்றங்களின் சமீபத்திய தீர்ப்புகள் மற்றும் தண்டனையின்மை, ஊழல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு எதிரான போராட்டத்தில் அவை வகிக்கும் பங்கைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படும்போக்கிற்கு துமிந்த சில்வாவின் சம்பவம் ஒரு உதாரணம். பலரது கொலைகளுடன் தொடர்புபட்டவரான துமிந்த சில்வாவுக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை உட்பட பல தண்டனைகளை விதித்தது. ஆனால், அவர் ஒரு தீவிர ஆளும் தரப்பு விசுவாசி என்பதால் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவால் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் அது தவறான நடவடிக்கை என்று மற்றொரு வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. தமக்கு ஆதரவானவர்கள் என்பதால் அவர்கள் தண்டனையில் இருந்து தப்பும் உரித்துடையவர்கள் என்று ஆட்சியாளர்கள் நம்புவதே இதற்குக் காரணம்.

தமிழ் மக்கள் விடயத்திலும் இதுவே நடக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களிலும் உலக சட்ட மீறல்களிலும் ஈடுபட்டவர்களும் போர்க் குற்றவாளிகளும் இங்கு பாதுகாக்கப்படுகிறார்கள். அவர்கள் அரசுக்கு ஆதரவான போரை முன்னெடுத்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே பாதுகாக்கப்படுகிறார்கள்.

இதேபோன்று, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு நாள் குண்டுவெடிப்பைத் தடுக்கத் தவறியதற்காக முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் நான்கு உயர் அதிகாரிகள் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவர்களுக்குத் தண்டமும் விதிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் இன்னமும் அதனைச் செலுத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதியின் தனிப்பட்ட நிதியில் இருந்து 100 மில்லியன் ரூபாவை (x273,300) நீதிமன்றில் முன்வைத்த பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அது இதுவரை நடக்கவேயில்லை.

ராஜபக்சக்கள் – பொருளாதாரத்தை தவறாகக் கையாண்டதன் மூலம் நாட்டின் மோசமான நிதி நெருக்கடியைத் தூண்டிய குற்றவாளிகள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அவர்களுக்கும் தண்டனை எதுவும் இதுவரை இல்லை.

இவையெல்லாம் தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படும் இலங்கையின் போக்குக்கான உறுதியான ஆதாரங்கள். இந்தப் போக்கால்தான் ஊழலும் இங்கு மலிந்துபோய்க் கிடக்கின்றது. ஊழலில் ஈடுபட்டுவிட்டு தண்டனையின்றித் தப்பிக்கொள்ள முடியும் என்று கருதுவதால்தான் தொடர்ந்து அந்தக் குற்றங்கள் இடம்பெறுகின்றன. இதில் மாற்றம் ஏற்படாத வரையில் புதிது புதிதாக எத்தனை சட்டங்களைக் கொண்டு வந்தாலும் ஊழலை ஒழிக்க முடியாது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பனங்கொட்டை வருகிறது

அங்கம் –31



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனங்கொட்டையினைப் பாத்தியில் அடுக்கி அதனை ஒழுங்காக மூடிய பின்னர் அது மண்ணின்கீழ் கிழங்கினை விடத்





தொடங்குகிறது என்பதற்கு அறிகுறியாக பனங்கொட்டையின் மேற்பகுயியில் மேலெழுந்து பச்சையாக இலை வரும். அப்படி வந்துவிட்டதென்றால் கிழங்கு வர ஆரம்பிக்கிறது என்றுதான் எடுத்துக் கொள்ளுவோம். பாத்தி யிலே அடுக்கப்பட்ட பனங்கொட்டைகளுள் சில கிழங்கினைத் தராமல் மேலே இலையினைக் காட்டிவிட்டு நின்று விடும்





. அப்படி அமைகின்ற பனங்கொட்டைகளும் பயனளிக்காமல் போய்வி டுவதும் இல்லை என்பதுதான் முக்கிய நிலை யாகும். கிழங்கினைத் தராவிட்டாலும் அந்தப் பனங்கொட்டைகளுக்கு ஒரு குற்ற உணர்வு இருக்கத்தானே செய்யும். அதனால் எப்படியும் தன்னால் ஏதாவது செய்து உதவிட வேண்டும் என்னும் நல்லெண்ணத்தால் " பூரான் " என்னும் சுவையான ஒன்றை கிழங்குக்கு ஈடாக னங்கொட்டை தந்து தன்னையும் ஓரங்கட்ட விடாமல் செய்து நிற்கிறது என் பதை கருத்திருத்தல் வேண்டும்.

கிழங்கினைத் தராமல் இருக்கின்ற பனங்கொட்டைகளை இரண்டாகப் பிளந்தால் அங்கே கட்டிப் பொன் போல் ஒன்று எம்மைப் பார்த்து மலர்ந்து நிற்கும்.திரட்சியாய் அமைந்திருக்கும் அதனையே நாங்கள் பூரான் என்று மகிழ் வுடன் வாயூறப் பார்த்து நிற்போம். கடினமான பனங் கொட்டைக்குள் மென்மையான அதுவும் இனிப்புச் சுவையான பூரான் அமைந்திருக்கிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா ! கடினமான உள்ளத்திலும் கனிவு இருப்ப தைக் காண்கிறோம் அல்லவா ? அதுபோலத்தான் கடினமாய் இருக்கும் பனங்கொட் டைக்குள்ளும் கனி வாய் , சுவை யாய் , பூரான் என்னும் ஆச்சரியம் இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா ! பூரான் சுவையினைத் தருவ துமட்டு மல்ல அது சத்துக்கள் கொண்ட ஒப்பற்ற இயற்கை உணவாகவும் விளங்குகிறது என்பது மனங்கொள்ளத்தக் கதாகும். பூரானில் 17.2 விகித மாச்சத்து 11 விகித உயிச்சத்து சி , ஓரளவு புரதம் ,கொழுப்பு , சர்க்கரைச் சத்து, அஸ்கா ர்பிக் அமிலம், , கல்சியம், மக்னீசியம், பொஸ்பரசு ஆகியன இருக்கிறதாம். அது மட்டுமன்றி ஒட்சியேற்றியாகவும் தொழிற்பட்டு - புற்றுநோய், இதயநோய் ஏற்படுவதனைத் தடுக்கும் வல்லமையான அன்டி ஒக்சிடென்ட் மற்றும் பினோலினையும் கொண்டிருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியது முக்கியமாகும்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பூரானை விரும்புகிறார்கள் என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தென லாம்.பூரானைத் தனியாகவும் சுவைத்து மகிழலாம். அதேவேளை பூரானை - பிட்டு, அப்பம் , என்பவற்றுடன் சேர்த்தும் சாப்பிடலாம் பூரான் என்றாலே இனிப்புச்சுவையினையே தரும் என்பது அதனைச் சுவைத்தவர்கள் அனைவருக் குமே தெரியும். அப்படி இனிப்பான பூரானை மேலும் சுவையாக்க , இனிப்பாக்க - பதனீரைப் பதப்படுத்த கொதிக்க வைக்கும் பொழுது வருகின்ற அந்தப் பாகினுள் , ஈர்க்கிலே பூரானைக் குத்தி அமுக்கி எடுத்துச் சுவைக்கும் ஒரு நிலையும் காணப்படுகிறது. சுவையினைத் தந்து நிற்கும் பூரான் சில

(7ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்குப் பல்கலையில் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு வெளியீடு

(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் நடத்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் (தமிழ்) மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' (தமிழ்) நூல் வெளியீடும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.






சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் வி.எச். அப்துல் ஹமீட் இன் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்த்த, தலைமையுரையை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர், இந்திய சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி, இந்திய புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூதின் தலைமை இமாம் ஹாபிழ் ஏ. பீர்முகம்மது பாகவி ஆகியோரும் ஆற்றினர்.

நிகழ்வில் ரஹ்மத் பதிப்பகத்தின் நிறுவனர் எம்.ஏ.முஸ்தபா அவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களுக்கு நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்றை வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.

இங்கு இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீடத்துக்கும் நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்று வழங்கி வைக்கப்பட்டதுடன் தென்கிழக்கு பல்கலைக்கழக அஷ்ரப் ஞாபகார்த்த நூலகத்திற்கு நூலகர் எம்.எம்.றிபாவுடீன் அவர்களிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நூலின் முதற்பிரதியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி பெற்றுக்கொண்டதுடன் அதிதிகளும் எம்.ஏ. முஸ்தபா அவர்களிடமிருந்து பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

ரஹ்மத் பதிப்பகத்தின் நிறுவனர் எம்.ஏ.முஸ்தபா அவர்கள் அதிதிகளுக்கு பொன்னாடைகள் போத்தியும் கௌரவித்தார்.

நிகழ்வில் நன்றியுரையை ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட பேராசிரியருமான றமீஸ் அப்துல்லாஹ் நிகழ்த்தினார்.

பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் மற்றும் பேராசிரியர் எஸ். எம். ஐயூப் ஆகியோர் நப்புநிமிர்த்தம் அதிதிகளுக்கு நூல்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

கல்முனை மாநகர சபை
කල්මුනේ මහනගර සභාව
KALMUNAI MUNICIPAL COUNCIL

செயற்றிறன் மதிப்பீட்டில்

## கல்முனை மாநகர சபை தேசிய மட்டத்துக்கு தெரிவு

(அஸ்லம் எஸ். மௌலானா)

2023 ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிடையான செயற்றிறன் மதிப்பீட்டுப் போட்டியில் கல்முனை மாநகர சபை கூடிய புள்ளிகள் பெற்று தேசிய மட்ட மதிப்பீட்டிற்கு தகுதி பெற்றுள்ளது.

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளரால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தெரிவுப் பட்டியலில் இத்தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் என்பனவற்றின் கண்காணிப்பில் சுயாதீனமான நடுவர்கள் மூலம் மாகாண மட்டத்திலான மதிப்பீடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மாநகர சபை கடந்த வருட ஆரம்பம் முதல் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் தொடர்ந்தேச்சியாக செயற்படுத்தி வந்த நிர்வாக சீர்படுத்தல்கள், சீரான ஆளணி முகாமைத்துவம், திட்டமிட்ட அடிப்படையிலான உட்கட்டமைப்பு விருத்திகள், நவீனமயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலக வசதிகள் என்பவற்றோடு மாநகர சபையின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர் குழாத்தின் அயராத முயற்சிகளின் பயனாக செயற்றிறன் மதிப்பீட்டில் பாரிய வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியிருந்தமையின் அடிப்படையிலேயே இம்மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முன்னிலைக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 80/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தென்கிழக்கு இளைஞர் பேரவையின் 'யூத் போரம் - 2024' நிகழ்வு சனியன்று



அம்பாறை மாவட்ட தென்கிழக்கு இளைஞர் பேரவை ஏற்பாடு செய்த 'யூத் போரம்- 2024' நிகழ்வு கல்முனை பிராந்திய ஒருங்கிணைப்பாளர் எல். எம். சாஜித் அவர்களின் நெறிப்படுத்தலில் மாளிகைக்காடு வாபா றோயலி மண்டபத்தில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டதுடன் மேலும் விசேட அதிதிகளாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸீல், கிழக்கின் கேடயம் பிரதானியும், கிழக்கு மாகாண அனைத்துப்பள்ளிவாசல்கள் பொதுநிறுவனங்கள் சம்மேளன நிறைவேற்று குழு உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ், சிரேஷ்ட சட்டத்தரணி ஹபீப் றிபான், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினரின் வெகுஜன தொடர்பாடல் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், அட்டாளைசேனை நலன்புரி அமைப்பின் தலைவர் அதிபர் ஏ.ஜி. அன்வர் நௌஸாத், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர். அமீர், எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, இணைப்பு செயலாளர் சட்டத்தரணி சப்ராஸ் நிலாம் உட்பட தேசிய புகழ்பெற்ற கலைஞர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சர்வதேச மற்றும் தேசிய அரசியல் போக்குகள், உள்நாட்டு அரசியல் விடயங்கள், சட்ட நுணுக்கங்கள், பொருளாதார மேம்பாட்டு விடயங்கள், சமகால இளைஞர்களின் தொழில் முயற்சிகள், இளைஞர்களின் எதிர்கால திட்டமிடல்கள், சமூக வலைத்தள பயன்பாடுகளும் அதன் நன்மை தீமைகளும் தொடர்பில் கலந்து கொண்ட இளைஞர்கள் அதிதிகளிடம் கேள்விகளை தொடுத்து தெளிவினை பெற்றுக்கொண்டனர். இதன் போது தேசிய புகழ்பெற்ற கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# திருகோணமலையில் பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்க்க ஆதரவளித்தல் செயலமர்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி பங்களிப்பின் கீழ் விழுது ஆற்றல் மேம்பாட்டு மைத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் எஸ.ஈ.டி.ஆர். நடைமுறைப்படுத்தும் பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் என்ற செயலமர்வானது மார்ச் 02,03 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இரு நாள்களாக நடைபெற்றது.

இதில் இரு பிரதேச சமூகங்களில் காணப்படும் பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டதோடு கூட்டு முயற்சியின் ஊடாக பிரச்சினைகளுக்கு எவ்வாறு நிகழ்வுத்தன்மையை ஏற்படுத்த முடியும் என்பதன் அடிப்படையில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

இதில் இரு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட துறைசார் அரச உத்தியோகத்தர்கள், மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், விழுது இளையோர்கள் மற்றும் சமூகமட்ட செயற்பாட்டு குழுவினர் செயற்திட்ட முகாமையாளர் நசீர் மற்றும் செயற் திட்ட ஒருங்கினைப்பாளர் உவைசுல் கர்னி அத்தோடு விழுது ஆற்றல் மையத்தின் திருகோணமலை மாவட்ட ஒருங்கினைப்பாளர்களான அபிவர்னா வர்ணகுலசிங்கம்,கிசாம் போன்றவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சம்மாந்துறை புலோக் து மேற்கு மு.கா.கிளை சீரமைப்பு கூட்டம்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை புலோக் து மேற்கு 1, கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புணரமைப்புக்கூட்டம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில்நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர்,பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன், அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், விளினையடி வட்டார வேட்பாளர் எம்.எம். சௌபீர், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நளீம், சம்மாந்துறை மத்திய குழு செயலாளர் எம்.ஜே.எம்.அஸாறுபீன்,அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல். நசீர் உற்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# 93ஆவது பிறந்த தின நினைவுப் பேருவுரையும் 25ஆவது வருட துரைவி நினைவு நாள் உரையும்

துரைவி விருதுகள் வழங்கலும், ஜெயம் விருது வழங்கலும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.00 மணிக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எம்.வாமதேவன் தலைமையில் நடைபெறும்

வரவேற்புரையும் தொகுத்து வழங்கலும் மேமன்கவி நிகழ்த்த 25 ஆவது வருட துரைவி நினைவு உரையை மாத்தளை சமூக சேவையாளர் எம்.சிவஞானமும், நினைவுப் பேருவுரையை மலையக சமூக அசைவியக்கத்தில் கல்வியின் வகிபங்கு என்னும் தலைப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜ் வழங்குவார்.

2023ஆம் ஆண்டுக்கான நூலுகளுக்கான துரைவி விருதுகள் வழங்கல், ஆய்வுக்கான நூலுக்கான விருது 'மார்க்சிய நோக்கில் திறனாய்வுக் கோலங்கள்' என்ற சபா.ஜெயராசாவின் நூலுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது ரொட்ணி விதானபத்திரனவின் 'லண்டன உசும' நாவலின் தமிழ் பெயர்ப்பான 'லண்டன் வெம்மை'

என்ற நூலுக்கு மொழிபெயர்ப்பாளர் சு.முரளிதரன் பெற உள்ளார்.

2023 ஆம்ஆண்டுக்கான நூல்களுக்கான துரைவி விருதுகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கி வைப்பார்.

ஜெயம் விருது, பெண் ஆளுமைக்கான விருது, கல்வித்துறையில் பணியாற்றிய பெண் ஆளுமையான திருமதி மகேஸ்வரி சபாரஞ்சன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

நன்றியுரை ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் வழங்குவார். (05)



# இலவச நோயாளர் பராமரிப்பு பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

'நோயாளர் பராமரிப்பு' பயிற்சிநெறியின் 37 ஆவது பிரிவினருக்கான பயிற்சிநெறி அண்மையில் ஏறாவூர் கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

மேல்மாகாணம் உள்ளிட்ட தூர இடங்களிலிருந்து பலர் இதில் கலந்துகொள்ள ஆர்வத்தோடு வந்திருந்தனர்.

இரண்டுநாள்கள் தொடர்ச்சியாக முழுநேரமாக நடைபெற்ற இந்த பயிற்சிநெறியில் நோயாளர் பராமரிப்பு தொடர்பான அடிப்படை அம்சங்கள் அனைத்தும் கற்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (05)

# அம்பாறை பிரதேச செயலாளராக அனுருத்த பியதாஸ கடமையேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை பிரதேச செயலக பிரதேச செயலாளராக இந்திக அனுருத்த பியதாஸ தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறையில் பிறந்து அம்பாறை டீ.எஸ்.சேனநாயக தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர் உகன பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். கடமையேற்பு நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோஸ்தர், கணக்காளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# கற்பகதரு என்னும் அற்புதம்..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மணி நேரங்கள் அதாவது இரண்டு தொடக்கம் மூன்று மணி நேரத்துக்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதனைச் சுவைக்கவே முடியாநிலைக்கு அது வந்து விடுகிறது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய தகவலேயாகும். குளிரூட்டிகளில் வைத்துப் பயன் படுத்தலாம் என்றும் அறிந்திட முடிகிறது. ஆனால் அதுவும் நீண்டதாக அமையாது என்பதும் கருத்திருத்த வேண்டி யதேயாகும். அதனால் அதனைப் பதப்படுத்தி தகரங்களிலோ அல்லது போத்தல்களிலோ உரிய முறையில் வைப்ப தால் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குப் பயன்படுதலாம், பலரும் பூரானின் சுவையினைச் சுவைத்து மகிழமுடியும் என் னும் ஒரு சிந்தனையும் இன்று ஏற்பட்டிருக்கிறது என்பதும் மனங்கொள்ளத்தக்கதேயாகும். இப்படியான் பூரான் புல வரின் போற்றுதலுக்கும் ஆளாகி " புத்தமுதம் " என்னும் சிறப்புப் பெயரினையும் வெற்றிருக்கிறது என்பதும் மனங்கொள்ளல் வேண்டும்.

சீராய் முளைத்தபனங் கொட்டைதனைச் சுட்டுவெட்டிப்
பூரானை யுண்பரது புத்தமுதாம் - ஆரெரியில்
வேகவையா துண்ணலாம் வேண் டுநறும் பிட்டுக்கும்

பனக்கொட்டை இன்னுமொரு பெயரினைத் தனக்காக்கிக் கொள்ளுகிறது. அந்தப் பெயர்தான் " ஊமல் " என்பதாகும். கிழங்கினைத் தந்த பின்பும் பனங்கொட்டையானது தன்னுடைய உருவினைக் குலைய விடாமல் அப்படியே காட்சிதரும்.அந்த நிலையிலும் எப்படியாகினும் உதவிட வேண்டும் என்னும் எண்ணமே அதனுள் மேலோங்கி நிற் கிறது என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும். அப்படியான நினைவுகள் வருவதற்கு அடிப்படைக் காரணமே அது வந்த இடமேயாகும். கற்பகதருவாய் மண்ணில் வந்த பனையின் வள்ளல் தன்மை என்றுமே , எந்தவொரு நிலை யிலும் உதவிடும் பாங்கினுக்கே இட்டுச் செல்லுவதாய் அமைந்திருக்கிறது என்பதுதான் இங்கு கருத்திருத்த வேண் டிய விடயமாக இருக்கிறதல்லவா !

ஊமல் என்னும் பெயரினைத் தாங்கியவுடன் பனங்கொட்டையானது எப்படி யெல்லாம் உதவி நிற்கிறது என்பதைப் பார்ப்பது அவசியம் அல்லவா ! ஊமல் என்றதும் எங்கள் எல்லோருக்கும் மனதில் உடனே தோன்றுவது புகையிலைக் குடில்தான். புகையிலையினைப் பதப்படுத்தி எடுப்பதற்கு என்று அமைக்கப்பட்ட புகையிலைக் குடிலின் மேற்பகு தியில் புகையிலைகளை கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். தொங்க விடப்படும் அந்தக் குடில் மண்ணினால் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கும். ஒரு போறணையின் நுட் பத்தில் அக்குடில் அமைக்கப்பட்டிருக்கும். அடிப்பகு தியில் நெருப்பு வைக்கும் வண்ணம் அந்த அமைப்பு இருக்கும். அங்கேதான் ஊமல் வந்து சேரும். அந்த ஊமலில் நெருப்பினை மூட்டி அது எரிந்து மேலே தொங்க விடப்பட்டிருக்கும் புகையிலையினைச் சரியான பதத்திற்கு வாட்டி உலர்த்தி எடுக்கும். ஊமல் எரியத் தொடங்கினால் அதிலிருந்து வருகின்ற வெப்பம் மிகவும் சிறந்த வெப்பமாகவே காணப்படும். அதுமட்டுமல்ல அதனால் புகையும் ஏற்படுவதில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஊமல் எனும்பொழுது - புகையிலைக்குப் புகைபோட எரிப்பதுதான் என்று மட்டுமே எண்ணி விடக்கூ டாது. ஊமலைப் பற்றி ஆராய்ந்திருக்கி றார்கள். ஆராந்து பார்ப்பது என்பது மிகவும் சிறப்பான ஒரு நிலையாகும். அப்பொழுதான் அதில் பலவற்றைக் காணக்கூடியதாக அமையும். அந்த வகையில் ஊமலில் - தூய பைரோலிக்னியசம் 34.60 விகிதம், தார் 6.40 விகிதம், கரி 24.40 விகிதம் , வாயுக்களும் , கழிவுகளும் 34.60 விகிதம் இருப்பதாகக் கண்டறியப்பட் டிருக்கிறது என்பது முக்கிய செய்தியாகும். ஊமலின் எடையில் 4.7 விகிதம் அசிட்டிக் அமிலமும், 1 விகிதம் நப்தா பைரோலிக்னியச அமிலமும் காணப்படுகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஊமல் என்று நாங்களெல்லோருமே சாதாரணமாக எண்ணி நிற்பதில் எவ்வளவு பொதிந்துபோய் இருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது எமக்கெல்லாம் திகைப்பாகவே இருக்கிறதல்லவா ? ஊமலை முழுமையாக எரிக்காமல் கரியாய் வரும் பதத்தில் எடுத்துப் பலநிலைகளில் பயன்படுத்தலாம் என்பதும் கருத்திருத்த வேண்டியதேயா கும்.அப்படிப் பதமாக எடுக்கும் ஊமற் கரியானது பொன் வேலை செய்வார்க்கும், தங்கத்தில் ஆபரணங்கள் செய்வா ர்க்கும் பயன்பட்டு நிற்கிறது. அதேவேளை கடினமாய் இருக்கும் இரும்பினைக் கொண்டு வேலை செய்யும் தொழிற் பட்டடைகளுக்கும் கைகொடுத்து நிற்கும் வகையில் ஊமற் கரியானது இருக்கிறது என்பதும் மனங்கொள்ளத்தக்க தாகும்.

ஊமல் ஒரு விலைமதிப்பான பொருளாகவும் இருக்கிறது என்பதையும் மனமிருத்துதல் வேண்டும். ஊமலிலே அசிட் டிக் அமிலம் காணப்படுகிறது.இதனால் ஊமலினை விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதும் முக்கிய நிலையாகும். ஊமலைக் கொண்டு அசெட்டிக் அமிலம் பெறப்பட்டால் அது இறப்பர் தொழிலுக்கு பெரிதும் உதவிடும் ஒன்றாகவே கருதப்படுகிறது. இறப்பர் பாலாகவே எடுக்கப்படுகிறது. அப்படி எடுக்கும் அந்தப் பாலினை கட்டியாக்குவதற்கு இந்த அசெட்டிக் அமிலமே தேவைப்படுகிறது. இறக்குமதி ஆக்கப்பட்டே அசெட்டிக் அமிலம் இறப்பர் தொழிலில் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் - இலவசமாய், இலகுவாய் கிடைக்கும் எங்கள் கற்பகதருவின் ஊமலினைக் கருத்தில் எடுத்தால் , இறக்குமதிச் செலவும் மிஞ்சும். எங்கள் சொந்தப் பொருளே மூலப் பொருளாகவும் மாறிடும் அல்லவா !

ஊமலிலிருந்து ஊக்கிய கரியினையும் எடுக்கலாம். இவ்வாறு எடுக்கும் ஊக்கிய கரியானது பல நிலைகளில் பயனாகி நிற்கிறது என்றும் அறியக் கூடியதாக இருக்கிறது. தொழிற்சாலைகளில் நீரினைச் சுத்தம் செய்ய வும், வேறு திரவ உணவுகளைச் சுத்தமாக்கவும், வடிசாலைகளில் மதுசாரத்தைச் சுத்திகரிக்கவும், பயன்படுத் தப்படுகின்றது, இவ்வாறு பயன்படும் இது விலை உயர்ந்த பொருளாகவும் அமைகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.திரவ உணவுகளைச் சுத்தஞ்செய்வதோடு அதில் காணப்படும் தேவையற்ற மணங்களையும் அகற்றவும் கூடியதாக இருக்கிறது. இந்தக் கரியிலுள்ள நுண்ணிய துவாரங்களால் எல்லாவிதமான அழுக்குக ளும் , மணங்களுமே உறிஞ்சி எடுக்கப்பட்டு நீக்கப்படுகின்றது என்பது நோக்கத்தக்கதாகும்,

கரியாகிப் பலன் கொடுக்கு முன்னும் உதவியே நிற்கிறது ஊமல் என்பதையும் கருத்தில் எடுக்க வேண் டும். ஊமலை இராண்டாகப் பிளந்தால் அதனுள்ளே கொப்பராத் தேங்காய்மாதிரிக் காய்ந்தபடி காணலாம். அதனை பனம்பருப்பு என்றும் சொல்லுவார்கள். இது மஞ்சளும் வெள்ளையும் கலந்த நிறத்தில் காணப்படும்.இதனை உணவாகவும் பயன்படுத்துகிறார்கள் என்பதும் நோக்கத்தக்கதாகும். இந்தப் பனம் பருப்பிலே சுக்கி ரோஸ் 0.38 விகிதமும், பிரக்டோஸ் 1.46 விகிதமும் குளுக்கோஸ் 3.21 விகிதமும் இருக்கிறதாக அறிய முடிகிறது.

இப்படிச் சத்துக்கள் நிறைந்திருக்கும் பனம்பருப்பினை வெளியே எடுத்து அதனைக் காயவிட்டு பின்னர் பிழிந்து எடுப்பதன் மூலம் அதிலிருந்து எண்ணெயினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இப்படிப் பெறப்படும் எண்ணையினை எங்களின் உணவுத் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம் என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தாகும்.

ஊமல் கொட்டையினைப் பிளந்து அதிலிருக்கும் பருப்பை நீக்கிய பின் பனங்கொட்டையினது புறப்பகுதியினைச் சிரட்டை என்றும் சொல்லுவார்கள்.

அருகக் கடவு ளடியார் தலைபோல்
மருவு மயிர்முழுது மற்ற - கருவூமல்

காணப்படுகிறதாய் ஒரு கற்பனையில் ஊமலினைத் தாலவிலாசம் என்னும் நூல் பார்க்கிறதாகச் சொல்லப்படுகிறது.

ஊமலிருந்து கரி , எண்ணெய் , அசெட்டிக் அமிலம் , என்னும் நிலையினையும் கடந்து . மேலும் பல பொருட்கள் வந்து குவிகின்றன என்பதும் நோக்கத்தக்கது.சித்த மருத்துவத்தில் குளிகை செய்யும் வழக்கம் இருக்கிறது என் பதை யாவரும் அறிவோம். அப்படிச் செய்யப்படும் குளிகைகள் வைத்துப் பயன்படுத்தும் பெட்டிகள் செய்வதற்கு ஊமல் பயனாகி நிற்கிறது என்றால் ஆச்சசரியமாக இருக்கிறதல்லவா ! குளிகைகளுக்கு மட்டுமல்லாது சித்தம ருத்துவத்தில் பயனாகும் செந்தூரத்தை வைத்துப் பாதுகாக்கவும் பெட்டியாக ஊமல் இருக்கிறது என்பதும் நல்ல செய்தியாக இருக்கிறதல்லவா ! பஸ்பம் என்பதும் சித்தமருத்துவத்தில் முக்கியமானது. அந்தப் பஸ்மத்தை அடை த்து வைக்கும் பெட்டியாகவும் ஊமலினாலாகிய பெட்டி இருந்திருக்கிறது.வைத்தியரிடம் மாத்திரைகளை வாங்கி வருபவர்கள் அதனைத் தங்கள் வீடுகளில் பக்குவமாகப்பாதுகாத்து வைக்கும் பெட்டியினையும் ஊமல்தான் தந்திருக்கிறது. இவற்றைவிட - மூக்குப்பொடி வைக்கும் பெட்டி, வெடி மருந்து வைக்கும் பெட்டி, சிறிய மின் சாதனங் களை வைப்பதற்கான பெட்டி என்னும் வகையிலும் பெட்டிகள் இருக்கின்றன என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஆகு முலர்ந்தகொட்டை யூமலால் - பாகமாய்
புல்லு நெருப்பிட்டுப் புறமகற்றிப் பொன்னிருப்புக்
கொல்லருக்குத் தூராக் குணக்கரியாம் - செல்வருக்கு
மூக்கிடுதூள் வைக்க மொழியு மருத்துவர்கட்
காக்குங் குளிகை யடைத்து வைக்கத் - தாக்கியே
பஞ்சுவைத்துச் சக்கிமுக்கி யால்நெருப்புப் - பண்ணுதற்கு
மஞ்சிகையு மாகு மதுரமொழி - வஞ்சியே

ஊமலினால் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை எங்கள் தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவரும் அழகுதமி ழால் அகமிருத்தச் செய்து நிற்கிறார்.

ஊமலினை மூலப்பொருளாகக் கொண்டு திருஷ்டிப் பொம்மைகள் செய்யப்படுகின்றன. அதுமட்டுமன்றிப் பல வித அழகான பொம்மைகள், சிறிய நிலையிலான அகப்பைகள், மேசையிலே வைக்கும் காகிதங்களுக்கான பாரந் தாங்கிகள், என்றெல்லாம் செய்யப்படுகின்றன.

பனங்கொட்டையினைப் பலநிலைகளில் பயன்பாட்டுக்கு உட்படுத்தும் நிலையும் தற்போது ஏற்பட்டிருக்கிறது. பனங்கொட்டையிலிருந்து மென்மையான நார் எடுக்கப்படுகிறது. இதனைக் கொண்டு கம்பளிகள் , ஆசன மெத் தைகள்,மென்மையான கயிறு, மாடுகளுக்கான மூக்கணாங்கயிறு, என்று பொருள்களின் உற்பத்தி விரிவடைந்தே செல்கிறது. மென்மையான நார்களில் துகள்கள் கிடைக்கின்றன. அதனையும் பயனாக்கி தலையணைகள், படு த்துறங்குவதற்கான மெத்தைகள் என்றும் பொருட்கள் வந்து அமைகின்றன என் னும் பொழுது , வியப்பாகவே இருக்கிறதல்லவா

காலைக்கதிர் Kalaikkathir

# உலகில் எந்த நாடும் எதிர்பார்த்ததை விட நமது பொருளாதாரம் வேகமாக மீண்டது

## அமைச்சர் ரமேஷ் பத்திரன பெருமிதம்



பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த இலங்கை, மிகக் குறுகிய காலத்தில் உலகின் மற்ற எந்த நாட்டையும் விட வேகமாக எழுந்து நின்றது என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வலியுறுத்தினார்.

கடன் வாங்காமல் பணத்தை அச்சிடாமல் மீண்டும் நாட்டின் அபிவிருத்திக்காக அரச ஒதுக்கீட்டை வழங்க அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'மக்களின் விருப்பத்துடன் இந்த நாட்டை மீண்டும் பலமாக்கி நிர்வகிக்க எங்களால் முடியும்' என்று அமைச்சர் இங்கு கூறினார். 75 வருட சாபத்தை குறுகிய இலாபங்களுக்காக சிலர் பேசினாலும், நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்களில் பௌதீக ரீதியாக அபிவிருத்தியடைந்துள்ளதாகவும், அதற்கான பெருமை அனைத்து அரசியல்வாதிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பஹா கலகெடிஹேன ஆரம்ப சிகிச்சைப் பிரிவை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அழைப்பின் பேரில் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன மற்றும் மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக்க ஆகியோர் தலைமையில் இந்த ஆரம்ப சுகாதார பிரிவு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

'அனைவருக்கும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' என்ற தொலைநோக்குப் பார்வையைக் கொண்டு, மேல் மாகாண நிதியில் இருந்து 500 லட்சம் ஷரூபா உள்ளூராட்சி ஒதுக்கீட்டில் இந்த ஆரம்ப சுகாதார பிரிவு நிர்மாணிக்கப்பட்டது. மேல்மாகாண முன்னாள் உறுப்பினர் லக்ஷ்மன் குணவர்தனவின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இது செயற்படுத்தப்பட்டுளது.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன மேலும் கூறியதாவது -

1948 இல் நாம் ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோது, கிட்டத்தட்ட 450 ஆண்டுகளாக காலனியாக இருந்தோம். இந்தப் பிராந்தியத்தில் எந்த நாடும் 450 ஆண்டுகளாக பிற நாட்டு மக்களுக்கு உட்பட்டது இல்லை. இலங்கை மாத்திரமே இவ்வளவு காலமும் பகுதியளவிலும் முழுமையாகவும் அடங்கி இருந்தது. 1948 இல் நாம் சுதந்திரம் பெறும் போது இந்நாட்டு மக்களின் வாழ்நாள் 42 வருடங்களாக இருந்தது. எங்கள் பெற்றோர் பிறந்த காலம் வெகு தொலைவில் இல்லை. இன்று நம் நாட்டில் ஒரு பெண்ணின் சராசரி ஆயுட்காலம் 80 ஆண்டுகள். ஆண்களின் ஆயுட் காலம் 77 வயது. நாம் ஒரு பெரிய மாற்றத்தின் யுகத்தில் வாழ்கிறோம். ஒருவரது வாழ்நாளில் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக மாற்றம் அற்புதமானது. ஆயுட்காலம் 42 ஆண்டுகளில் இருந்து 80 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. சுகாதாரத் துறையில் நமது முன்னேற்றத்தை இந்தப் பிராந்தியத்தில் உள்ள வேறு எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாது. எங்கள் ஆயுட்காலம் கூடிவிட்டது. உலகில் வளர்ந்த நாடுகளைப் போல உலக அளவில் இறப்பு விகிதம் குறைவாகவும் உள்ளது. குழந்தை இறப்பு குறைந்துள்ளது. தடுப்பூசி ஏற்றப்படும் விகிதம் 99.9 வீதம் ஆகும். அந்த வகையில் நாம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளோம். அதற்குக் காரணம், இலங்கையில் உள்ள இந்த ஆரம்ப சுகாதாரத் திணைக்களங்களில் ஒவ்வொரு 5 கிலோமீற்றருக்கும் ஒரு மாவட்ட வைத்தியசாலை, ஆரம்ப வைத்தியசாலை, பொது வைத்தியசாலை அல்லது மூன்றாம் நிலை சிகிச்சை நிலையங்களில் ஆரம்ப சுகாதார வைத்திய பிரிவு உள்ளதாகும்.

நமது நாடு சுதந்திரம் அடைந்தபோது மருத்துவமனைகளில் படுக்கைகள் 18,000 ஆக இருந்தது. எங்கள் மருத்துவமனை அமைப்பில் 90,000 உள்நோயாளர்கள் படுக்கைகள் உள்ளன. நாம் சுதந்திரம் பெற்றபோது, இந்த நாட்டின் மருத்துவமனைகளில் கிட்டத்தட்ட 450 மருத்துவர்கள் பணிபுரிந்தனர். எம்.பி.பி.எஸ் டாக்டர்கள் பாதி பேர்தான் இருந்தனர். இன்று நாட்டில் 23,000 எம்.பி.பி.எஸ் மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். சுமார் 700 தாதிமார்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் இன்று 45,000 தாதிமார்கள் பணிபுரிகின்றனர். சுகாதார அமைப்பு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் திறன் கொண்டதாக வளர்ந்துள்ளது.

சுதந்திரம் பெற்ற போது நம் நாட்டில் 3,100 பாடசாலைகள் இருந்தன. இன்று 10,100 பாடசாலைகள் உள்ளன. 1945ஆம் ஆண்டு முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரவால் அரச சபையில் முன்வைக்கப்பட்ட இலவசக் கல்விச் சட்டமே இந்நாட்டின் சமூக மாற்ற யுகத்தின் மிகப் பெரிய அடையாளம். எங்கள் தாத்தா, பாட்டி பாடசாலைக்குச் செல்லவில்லை, ஆனால் அந்த அமைப்புக்குப் பிறகு, எங்கள் பெற்றோர் பாடசாலைக்குச் சென்றனர். அந்த அப்பா, அம்மாக்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகத்துக்குச் சென்றனர். அந்தப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற பெற்றோரின் பிள்ளைகள், அந்த நான்காம் தலைமுறையினர், இன்று வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்று, வேலை செய்யவும் செய்கின்றனர். இன்று அவர்கள் டாக்டர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் என பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறார்கள். 2500 ஆண்டுகள் நீண்ட எழுத்து வரலாற்றைக் கொண்டிருந்தாலும் நம் நாட்டில் இப்படியொரு வரலாறு இருந்ததில்லை.

நாங்கள் சுதந்திரம் பெற்ற போது கொழும்பு பல்கலைக்கழகம் மட்டுமே இருந்தது. ஆனால் இன்று நம் நாட்டில் 18 பல்கலைக்கழகங்கள் உள்ளன. கம்பஹா விக்கிரமாராச்சி பல்கலைக்கழகம் 4 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. பல தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன. கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளன. 5 வீதம் பெற்ற மின்சாரத்தை இன்று 99 வீதம் பெற்றுள்ளனர். இன்று மூன்று மடங்கு அதிகமானோர் தொலைபேசி பயன்படுத்துகின்றனர். பௌதீக வளங்களில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

75 ஆண்டுகளுக்குப் பிறகு, கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, மின்சாரம் என பல்வேறு துறைகளில் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கு 75 ஆண்டுகால சாபம் என்கிறோம். இந்த நாட்டில் நடந்த தவறுகளால் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கடனை கட்ட முடியாமல் தவித்த போது இந்த நாட்டில் சில நன்றிகெட்டவர்கள் 75 வருட சாபம் பற்றி பேச ஆரம்பித்தனர். இந்த நாட்டில் நடந்த தவறுகளுக்கு ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் பொறுப்பேற்க வேண்டுமானால் ஆம், அவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். இந்த நாட்டில் நடந்த ஆயிரமாயிரம் நல்ல காரியங்களின் பெருமையை அவர்கள் பெற வேண்டாமா?

கம்பஹா மாவட்ட நன்றியுள்ள மக்கள் அந்தப் பொறுப்பை மறக்கவே மாட்டார்கள். அதனால்தான், அந்த நெருக்கடியான காலகட்டத்தில் சமூகப் பணிகளைச் செய்த அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களுடன் நீங்கள் அனைவரும் ஒன்றாக நின்றீர்கள்.

நமது பொருளாதாரத்தில் சில சில முரண்பாடுகள் இருக்கலாம். அது எப்படி நடந்தது?வரியைக் குறைத்து மக்களுக்குச் சலுகை கொடுக்கப் போனார்கள். 300 ஷரூபாவுக்கு விற்கப்படும் பெற்றோல் லீற்றருக்கு 150 ஷரூபாவுக்கு விற்கப்பட்டதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது. 45 ஷரூபா உற்பத்திச் செலவாகும் மின் அலகு 22 ஷரூபா கொடுக்கச் சென்றால், மின்சார சபைக்கு நஷ்டம். அந்த இழப்பில் இருந்து எங்களால் மீள முடியவில்லை. இது இந்நாட்டு மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியது.

2022 பொருளாதார நெருக்கடிக்கு முன்னர், இந்த நாட்டில் கொவிட் நெருக்கடி இருந்தது. கொவிட் நெருக்கடியின் போது கூட, இந்த நாட்டின் சுகாதார சேவை உலக அளவில் இயங்கி வந்தது. நம் நாட்டின் மக்கள்தொகைக்கு ஏற்ப, கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. கொவிட் நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. கொவிட் பரவிய காலத்தில் நம் நாட்டில் உலகத் தரம் வாய்ந்த தடுப்பூசி திட்டம் இருந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி நாடுகளை விட எங்கள் கொவிட் எதிர்ப்பு பயிற்சி மிகவும் சிறப்பாக இருந்தது. நம் நாட்டு மக்களுக்கு இந்த நாட்டில் வலுவான சுகாதார சேவை உள்ளது, மேலும் இந்த நாட்டு மக்களை குணப்படுத்த அரசு ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டனர். கடந்த காலத்தை நாம் மறக்க முடியாது. அந்த சேவைகளை இந்த நாட்டில் முன்னெடுக்க வேண்டும். அந்தச் சேவைகளைத் தொடர மறுமுதலீடு செய்யத் தொடங்கியுள்ளோம். தற்போது இந்த அரசிடம் பணம் இல்லை. 2024 இல் மீண்டும் பணத்தை முதலீடு செய்வோம். அந்தப் பணத்தில் மாற்றம் உள்ளது. வாங்கிய கடனில் முதலீடு செய்தோம். ஆனால் 2024 இல் அரசால் பெறப்படும் அரசு ஒதுக்கீட்டில் முதலீடு செய்வோம்.

இந்த ஆண்டு நாங்கள் பணம் அச்சிடவில்லை. பணத்தை அச்சிடாமல் அபிவிருத்தியைத் தொடங்குங்கள். வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் அணு அணுவாகக் கட்டமைக்கப்படுகிறது. அந்த பொருளாதாரம் உலகில் எந்த நாடும் எதிர்பார்த்ததை விட வேகமாக மீண்டும் கட்டமைக்கப்படுகிறது. கிரீஸ், வெனிசுலா, ஈக்வடோர் இன்னும் விழுந்து மண்டியிடுகின்றன. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள். நாங்கள் அதிர்ஷ்டவசமாக, திரிவிட ரத்னவின் ஆசியுடன், புனித பூமியின் சக்தியின் மகிமையுடன், இந்த நாடு மிகக் குறுகிய காலத்தில் காலூன்றி நிற்கிறது. அது இலங்கை மக்களின் பலமும் அதிர்ஷ்டமும் ஆகும். இந்த நாட்டை மீண்டும் வலுவாக நிர்வகிக்க முடியும். இது மக்களின் விருப்பத்தால் நிர்வகிக்கப்படுகிறது. - என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் சஹன் பிரதீப் விதான, நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் மகேந்திர ராஜபக்ஷ, மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க வன்னிநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (05)

# ஒலி, ஒளிபரப்பாளர் ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு!

(எம். எப். றிபாஸ்)



மறைந்த ஒலி ஒளிபரப்பாளரும் கல்வியியலாளருமான மர்ஹூம் ஏ ஆர் எம் ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வு சாய்ந்தமருது பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் யூ.எல்.யாகூப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏ ஆர் எம் ஜிப்ரி ஒரு 'சகாப்தம்' என்னும் நூல் அறிமுகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத் முன்னிலையில் முதன்மை அதிதிகளாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கல்முனை, சாய்ந்தமருது பிரதேச செயலாளர்களான ஜே.லியாக்கத் அலி, எம் எம் ஆஷிக், பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஷஹிலா ஆர் இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.றம் ஸீன் பக்கீர், வெஸ்லி உயர் தர பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசன், மற்றும் ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள், கல்வியலாளர்கள் உலமாக்கள் என பலரும் சிறப்பதிதிகளாக பங்கு பங்குபற்றியிருந்தனர்.

நினைவுப் பேருரையை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்வும், நிகழ்ச்சி நெறியாள்கை சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் மனிதநேயன் இர்ஷாத் ஏ காதரும் நிகழ்ச்சி ஒருங்கமைப்பை பிறை எப் எம், அறிவிப்பாளர் ஏ. ஆர். எம். நௌபீலும் நிகழ்த்தினர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# விகிதாசார தேர்தல் முறைமையால் அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் இல்லாமல் செய்யப்பட்டன

## மு. கா. பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை கருத்து

(கே எ ஹமீட்)

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட விகிதாசார தேர்தல் முறைமையால் அம்பாறை மாவடடத்தில் கல்முனை,சம்மாந்துறை,பொத்துவில் தொகுதிகளில் இருந்து ஒவ்வொரு பொதுத்தேர்தல்களிலும் எமது முஸ்லிம் சமூகத்திற்கு கிடைத்து வந்த மூன்று நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் இல்லாமல் செய்யப்பட்டன என சம்மாத்துறை 11,12,வீரமுனை 04 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக்கூட்டம் முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும்,முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

தொகுதி அடிப்படையில் தேர்தல் நடைபெற்ற போது மூன்று தொகுதிகளில் நமது சமூகத்தை சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

விகிதாசாரத் தேர்தல் முறைமையால் பல தடவைகள் மூன்று தொகுதிகளிலும் நமக்கான மூன்று உறுப்பினர்களையும் பெற முடியாத சூழ் நிலை ஏற்பட்டது.

சம்மாந்துறைக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதில் நாம் எல்லோரும் உடன்படுகிறோம். அம்பாறை மாவட்டத்தில் மூத்த பிரதேசமாகவும், ஆகக்கூடிய மக்கள் வாழும் பிரதேசமாகவும் சம்மாந்துறை பிரதேசம் அமைந்துள்ளது. அது மாத்திரம் இன்றி கடந்த காலங்களில் சம்மாந்துறை அரசியல் அதிகாரம் தான் அம்பாறை மாவட்டம் முழுவதும் பணிசெய்த வரலாறு உள்ளது.

அகில இலங்கை சோனகர் சங்கத்தின் கிழக்கு மாகாண அமைப்பாளர் பதவியில் நான் இருந்த போது நமது சமூகத்தின் மூத்த தலைவர் சேர் ராசிக் பரீட் இறையடி சேர்ந்தார்.

அவருக்கான முதலாவது அனுதாபக் கூட்டத்தை கிழக்கு மாகாணத்தில் அட்டாளைச்சேனையில் நடத்துவதற்கு அம்பாறை மாவட்ட இளைஞர்கள் எல்லோரும் தீர்மானித்தோம். அம்பாறை மாவட்டத்தில் எல்லா அரசியல் பிரமுகர்களையும் இந்நிகழ்வுக்கு அழைப்பது எனவும் தீர்மானித்தோம். நமது மாவட்டத்தில் மூத்த அரசியல்வாதியும், அமைச்சரும் மர்ஹூம் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களை அம்பாறை மாவட்ட இளைஞர்கள் சந்தித்து மறைந்த சேர் ராசீக் பரீட் அவர்களுக்கு இலங்கையில் முதலாவது அனுதாப கூட்டத்தை அட்டாளைசசேனையில் நடத்த தீர்மானித்துள்ளதாகவும் இந்த நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தோம். மர்/ஹும் எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்கள் ஆச்சரியம் அடைந்து இளைஞர்களாகிய எங்களுடைய முயற்சியை பாராட்டினார். அன்றைய தினத்தில் அவருக்கு மிக முக்கியமான நிகழ்வு இருந்ததை இரத்து பண்ணிவிட்டு சேர் ராசீக் பரீட் அவர்களின் அனுதாப கூட்டத்தில் கலந்து சிறப்பித்தார்.



சம்மாந்துறைகான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக பெறுவதற்கான நடவடிக்கையில் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கட்டமைப்பை புனரமைத்த பின் சம்மாந்துறை சமூகத்திடம் பேச்சில் ஈடுபட வேண்டும். சம்மாந்துறைக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு பெறலாம் என்ற புதிய சிந்தனைகளும் வெளியாகியுள்ளன.சம்மாந்துறையில் இயங்கிவரும் அரசியல் கட்சிகளுடன் நாம் பேச்சுவார்த்தைகளையும் ஈடுபட வேண்டும். எல்லோரினதும் ஒத்துழைப்பையும் பெற்று சம்மாந்துறைக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஊடாக நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளமையும், நடைபெற்ற ஒரு பொதுத்தேர்தலில் சம்மாந்துறை மக்கள் அதிகமான வாக்குகளை சுயேச்சைக்குழுவுக்கு அளித்த போதும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறமுடியவில்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

எனவே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஊடாக ஒற்றுமைப்பட்டு சம்மாந்துறை சமூகத்துடன் பேச்சுகளை மேற்கொண்டு சம்மாந்துறைகான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற முயற்சிக்க வேண்டும்.

விகிதாசார தேர்தல் முறையில் பல பிரச்சினைகள் உள்ளன. தெரிவு வாக்குவிடயத்தில் ஒரே கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மத்தியில் போட்டி ஏற்படும் நிலைமையும் உருவாகியுள்ளது.

இது நமது கட்சிக்குள் மாத்திரம் உள்ள பிரச்சினை இல்லை. எமது நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் இப் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. நமது கட்சி பொதுத்தேர்தலில் தனித்து மரச்சின்னத்தில் போட்டியிட்டால் நாம் அச்சம் அடையத் தேவையில்லை. எப்படியும் மரச்சின்னத்துக்கு வாக்களித்தால் எமது கட்சியை சேர்ந்த வேட்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவார்கள்.

ஏனைய கட்சிகளோடு இணைந்து தேர்தலில் கூட்டணியாக போட்டியிடும் போது நாம் நமது கட்சியின் வேட்பாளர் மூவருக்கும் நமது தெரிவு வாக்குகளை அளிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எமக்குள்ளது.

ஒரு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களாக 03 முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டு 33ஆயிரம் முஸ்லிம் வாக்குகளை ஐ.தே.கட்சியின் சின்னமான யானை சின்னத்துக்கு அளித்தனர்.மூன்று முஸ்லிம்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தே 33 ஆயிரம் முஸ்லிம் வாக்குகளை அளித்தார்கள் தேர்தல் முடிவில் அம்பாறை தொகுதியில் இருந்து தயாரத்ன,கலபதி, பக்மீபவ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

முஸ்லிம் வேட்பாளர்கள் எல்லோரும் தோல்வி அடைந்த வரலாற்றையும் நாம் மறந்து விடக்கூடாது.

கட்சிக்கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படுவதால் பல நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன.

மக்கள் பிரதிநிதிகளும்,கட்சி பிரமுகர்களும் மக்களை சந்தித்து கட்சி செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நமது கட்சியின் தேசிய தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் (எம்.பி)அவர்களின் பணிப்புரையின் கீழ் கட்சிக் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக மக்கள் சந்திப்புக்கள், கட்சிக் கட்டமைப்புக்கள் ஏற்படுத்துதல், கிராம மட்டத்தில் இளைஞர்களை ஒன்று திரட்டி கட்சி தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி கட்சி செயற்பாடுகளில் புதிய இளைய தலைமுறைகளை இணைத்து கொண்டு கிராம மட்டத்தில் மகளிர்களை ஒன்று திரட்டி மகளிர் மத்தியில் கட்சி ஆதரவாளர்களை இணம் கண்டு எமது கட்சியில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுத்தல் வேண்டும்.

தற்போது 22 வயதை அடைந்த இளைஞர்களுக்கு பெரும் தலைவர் அஸ்ரப் அவர்கள் என்ன சூழ் நிலையில் நமது சமூகத்திற்காக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினார் என்பதனையும், அன்றைய கால கட்டத்தில் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அறிவதற்கு நமது இளைஞர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

எனவே நமது இளைஞர்களுக்கான இடத்தை இப்போதிருந்த நாம் வழங்கி கட்சி செயற்பாடுகளில் நமது இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செய லாளர் மன்சூர் ஏ காதர், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், வீரமுனை வட்டார வேட்பாளர் தபீக் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# இராமாயண சித்திரகாவியக் கண்காட்சியில் சிறப்பு அதிதியாக அமைச்சர் ஜீவன் பங்கேற்பு

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் இலங்கை மக்களின் நலன்கருதி இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளையும், மலையக மக்களுக்காக இந்தியா வழங்கி வரும் ஆதரவையும் ஒருபோதும் மறக்கமாட்டோம்.



கொழும்பு - டில்லி உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னின்று செயற்படுவேன் - என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இராமாயணம் சித்திரகாவியம் எனும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் திறக்கப்பட்டுள்ள நிலையில், இராமாயண காவியத்தின் புகழை உலகறிய செய்யும் நோக்கில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணக்கருவுக்கமைய, இந்திய கலாசார அமைச்சின் ஏற்பாட்டிலேயே இந்நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரின் அழைப்பையேற்று சிறப்பு அதிதியாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து சிறப்பித்தார். ஆன்மீக தலைவர்கள், ஆன்மீக செயற்பாட்டாளர்கள், இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி, வெளிநாட்டு தூதுவர்கள், இந்திய அரச அதிகாரிகள், இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் ஷேனுகா செனவிரத்ன மற்றும் அதிகாரிகள், இலங்கையிலிருந்து அமைச்சருடன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தராஜன், அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர், இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் கியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான் -

‘ இலங்கை, இந்திய உறவு பல நூற்றாண்டுகளாக பலமாகவே உள்ளது. நெருக்கடி ஏற்பட்டபோது கூட இந்தியா தான் முதலாவதாக நேசக்கரம் நீட்டியது. இதனை நாம் மறக்கமட்டோம்.

இராமாயணத்துடன் தொடர்புபட்ட முக்கியமான புனித தலங்கள் நான் பிரதிநிதித்துவப்படுத்தும், மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளன. இதன்மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் திட்டம் வகுத்து வருகின்றோம்.

இராமாயணம் சித்திரகாவியம் நிகழ்வு இந்தியாவுக்கு மட்டும் அல்ல இலங்கைக்கும் மிக முக்கியம். மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்கு நான் முன்னின்று செயற்படுவேன்.’ - என்றார்.

அதேவேளை, அருங்காட்சியகம் அரங்கை அமைச்சர் திறந்து வைத்ததுடன், புகைப்பட கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார். (05)

# டிக்கோயா நுண்கலைக் கல்லூரியில் ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஹற்றன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட டிக்கோயா நுண்கலை கல்லூரியில் இவ்வருடம் முதல் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கல்லூரியின் அதிபர் ஆனந்தராஜ் தெரிவித்தார்.


மேற்படி பாடசாலையில் தரம் ஆறு முதல் ஆங்கில மொழிமூலம் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஹற்றன் கல்வி வலயம் அனுமதி வழங்கி யுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து தற்போது தரம் ஆறு முதல் ஆங்கில மொழி மூலம் கற்பதற்காக மாணவர்கள் சேர்த்து கொள்ளப்பட்டுவருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஹற்றன் பகுதியில் அரச பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் மாணவர்கள் கற்பதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்படுவதால் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் தனியார் பாடசாலைகளை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது உள்ள பொருளாதார நெருக்கடியில் பிள்ளைகளின் கல்வியைக் கொண்டு செல்வது மிகவும் கடினமாக காணப்படுவதால் அரச பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமையவே தற்போது டிக்கோயா நுண்கலைக் கல்லூரியில் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)





# மட்டக்களப்பில் கோர விபத்து இளைஞர் சாவு

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட எருவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று (திங்கட கிழமை) அதிகாலை சுமார் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

நண்பர் ஒருவரின் பிறந்த நாளிற்கு சென்று விட்டு வருகை தந்த நிலையில் வேக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி அருகில் இருந்த மரம் ஒன்றில் மோதுண்டதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதன் போது மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லும் வழியில் ஓர் இளைஞர் உயிரிழந்துள்ளார் எனவும், மற்றைய இளைஞர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் எருவில் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனவும், உயிரிழந்த இளைஞனின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# வாதுவையில் போதைப் பொருளுடன் சிறுமியும் அவரது காதலனும் கைது

*வாதுவை – பொஹத்தரமுல்ல கடற்கரை பகுதியில் போதைப்பொருளுடன் 17 வயது சிறுமியும் அவரது 30 வயதான காதலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வாதுவை பிரதேசத்தை சேர்ந்த 17 வயது சிறுமி மற்றும் 30 வயது இளைஞராவர்.*

*பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 20 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*சந்தேக நபரான சிறுமி ஹொரணை பிரதேசத்தில் மேலதிக வகுப்பொன்றில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்பிய நிலையில் தனது காதலனான 30 வயது இளைஞருக்காக போதைப்பொருளை பாதுகாப்பாக தன்வசம் வைத்திருந்தார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.*

*சந்தேக நபர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களா என பரிசோதிப்பதற்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்படவுள்ளனா எனவும் பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*





# சூரங்கள் பொதுவிளையாட்டு மைதானக் காணி பிரச்சினையை தீர்த்து வைத்தார் தௌபீக் எம்.பி.

(எஸ். சினீஸ் கான்)

கிண்ணியா சூரங்கள் பொதுவிளையாட்டு மைதானத்திற்கான காணி உரியமுறையில் அடையாளம் காணப்பட்டு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கால் ஞாயிற்றுக் கிழமை பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கட்டது.

இக் காணிப்பிரச்சினை சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக நீண்ட இழுபறியில் இருந்துவந்த நிலையின், அண்மையில் அந்த மைதானத்திற்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அப்பிரச்சினையை தீர்த்துதருவதாக வாக்குறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# இரண்டாம் மொழி சிங்களத்தில் சித்திபெற்றோருக்கு சான்றிதழ்



(சர்ஜ/ன் லாபீர்)

அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று(திங்கட்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு இரண்டாம் மொழி சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா,விசேட அதிதிகளாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல்,மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எப்.சாஹீனா,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம்,இரண்டாம் மொழி பயிற்சி நெறிக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல் பிர்தௌசியா உட்பட பலரும் கல்ந்து கொண்டனர்.

மேலும் இந் நிகழ்வில் பிரதேச செயலாளரால் 'முயற்சியும், வெற்றியும் மற்றும் பாராட்டுக்களும்' எனும் தலைப்பில் பல விடயங்களை மையப்படுத்தி உரை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## ஜம்பட்டா வீதி துப்பாக்கி சூட்டுக்கு உதவிய சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு - ஜம்பட்டா வீதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு உதவிய சந்தேக நபர் புளூமண்டல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன் படுத்தப்பட்ட துப்பாக்கியை மறைத்து வைத்திருந்த குற்றத்திற்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கியைச் சந்தேக நபர் சேதாவத்தை பகுதியிலிருந்து மஹவத்தை பகுதிக்கு ஓட்டோவில் கொண்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 15 ஐ சேர்ந்த 34 வயதுடையவராவார்.

கடந்த 25 ஆம் திகதி ஜம்பட்டா வீதியிலுள்ள இறைச்சிக் கடைக்கு அருகே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (05)

## பருவகால சுற்றுலாவுக்காக புறா மலை திறந்து வைப்பு

இவ்வருடத்திற்கான பருவ கால ஆரம்பத்தை முன்னிட்டு சுற்றுலா பயணிகளின் வருகைக்காக ஞாயிற்றுக்கிழமை புறா மலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக உலக வன ஜீவராசிகள் தினமான ஞாயிற்றுக்கிழமை ஆளுநரால் உத்தியோகபூர்வமாக புறா மலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், நிலாவெளி சுற்றுலா அபிவிருத்தி குழு, திருகோணமலை ஹோட்டல் சங்கம் மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றின் அனுசரணையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுற்றுலா பணியக தவிசாளர் மதன், வனவிலங்கு ஜீவராசி திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)

## பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கு தூக்குத் தண்டனை

பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்றால் நேற்று (திங்கள்கிழமை) மரணதண்டனை விதிக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குறித்த நபர் உயிரிழந்தார்.

இதுதொடர்பானவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் குற்றம் நிஷரூபிக்கப்பட்டதால் இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.03.2024இல் வெளியிடப்பெற்றது.